பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 08 2025 **FRIDAY** 7 15 **PM**

**தலைப்புச் செய்திகள்**

1. தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
   *12th Fail* திரைப்படம் சிறந்த திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது
2. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில், இந்தியா – பாகிஸ்தான் ராணுவத்திற்கு இடையேயான நேரடி பேச்சுவார்த்தையின் மூலமே சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய அரசு கூறியுள்ளது.
3. ரயில்களில் பெண் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
4. நாடுமுழுவதும் கடந்த மே மாதம் வரை 405 தனியார் தொலைக்காட்சி செய்தி சேனல்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்
5. *Macau* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Lakshya Sen* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

2023ஆம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

*12th Fail* திரைப்படம், தேசிய அளவில் சிறந்த திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த நடிகருக்கான விருதை ஷாருக்கானும், விக்ராந்த் மேஸி-க்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சிறந்த நடிகைக்கான விருதை ராணிமுகர்ஜி பெறுகிறார்.

தமிழில் சிறந்த திரைப்படத்திற்கான விருதை பார்க்கிங் திரைப்படம் பெற்றுள்ளது.

சிறந்த இசையமைப்பாளர் விருது, வாத்தி திரைப்படத்திற்கு இசையமைத்த ஜி.வி. பிரகாஷ்க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த துணை நடிகருக்கான விருது எம்.எஸ். பாஸ்கருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, சண்டை நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள், இந்தியா – பாகிஸ்தான் ராணுவத்திற்கு இடையே நேரடியாக நடைபெற்றதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில், இதுதொடர்பான கேள்விக்கு எழுத்து மூலம் பதிலளித்த வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங், இந்த பேச்சுவார்த்தைகள் இருநாடுகளுக்கும் இடையே அனுமதிக்கப்பட்ட ராணுவ தகவல் தொடர்பு கட்டமைப்பு மூலமாகவே மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சண்டை நிறுத்தம் கோரி, பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையையும் இந்தியா நேரடியாக பரிசீலித்து முடிவெடுத்ததாகவும் அவர் கூறினார்.

அமெரிக்க உள்ளிட்ட எந்தவொரு நாட்டின் தலையீடும் இன்றி இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலமாகவே, ஆப்பரேஷன் சிந்தூர் சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

நாட்டின் பாதுகாப்பிற்கு தேவையான அனைத்தும், தேவை மற்றும் அண்டை நாடுகளுடனான உறவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், தற்போதைய உலக சூழலில், நாட்டின் பாதுகாப்பிறகு எது தேவை என்பதன் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதாக கூறினார்.

இந்தியா – ரஷ்யா இடையேயான இருதரப்பு உறவு சுமுகமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான நல்லுறவு பற்றி குறிப்பிட்ட திரு. ஜெய்ஸ்வால், ஜனநாயக மற்றும் பரஸ்பர நலன்கள் அடிப்படையிலும், ஒட்டுமொத்த உலகின் நல்லுறவு அடிப்படையிலும் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

**>>>>>><<<<<<**

ரயில்களில் பெண் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது, இதனை தெரிவித்த அவர், ரயில் நிலைங்கள் மற்றும் ரயில் பெட்டிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

தொலைதூர ரயில்களில் தனியாக பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எனது தோழி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கைகளில், ஆண் பயணிகள் பயணம் செய்வதை தவிர்க்க, கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்காக, ரயில்வே பாதுகாப்புப் பிரிவில் போதிய அளவில் பெண் அதிகாரிகளை நியமிக்குமாறு அனைத்து ரயில்வே மண்டலங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

கடந்த மே மாதம் வரை நாட்டில் 405 தனியார் தொலைக்காட்சி செய்தி சேனல்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில், இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், ஆன்லைன் செய்தி நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினார்.

அனைத்து தொலைக்காட்சி செய்தி சேனல்களுக்குமான வழகாட்டு நெறிமுறைகள், கடந்த 2022ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளதையும் டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

**>>>>>><<<<<<**

கடந்த ஜுன் மாத இறுதிவரை 106 ரயில் நிலையங்களில் மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பாக அவர் அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில். ரயில் பயணிகளுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், இந்த மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட தூர ரயில் பயணம் மேற்கொள்வோருக்கு இந்த மருந்தகங்கள் பேருதவியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுதும் 16 ஆயிரத்து 912 மக்கள் மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், இதில் 8 ஆயிரத்து 660 மருந்தகங்கள் கிராமப்புறங்களில் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தினந்தோறும் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்களை பயன்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் மக்கள் மருந்தகங்களின் பயனாக சாமானிய மக்கள் 38 ஆயிரம் கோடி ரூபாய் வரை பயனடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மருந்தகங்களுக்கு தேவையான அனைத்து மருந்துகளும் உடனுக்குடன் கிடைப்பதற்குத் தேவையான கிடங்கு மற்றும் விநியோக கட்டமைப்புகள் உருவாக்கி தரப்பட்டுள்ளதாகவும் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

**>>>>>><<<<<<**

தமிழகத்திற்கு கடந்த மூன்றாண்டுகளில் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக மத்திய அரசு போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. கமலேஷ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், கிராமப்புறங்களில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம். அந்தியோதயா திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு 2023-24ஆம் ஆண்டில் 12 ஆயிரத்து 616 கோடி ரூபாயும், நடப்பாண்டில் 7 ஆயிரத்து 585 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமரின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 2023-24ஆம் ஆண்டில் 975 கோடி ரூபாயும், கடந்த ஆண்டில் 310 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 741 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த 5 வீராங்கனைகள் கலந்து கொண்டு, வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

*இப்போட்டிகளை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய வீராங்கனைகளில் ஒருவர் எமது செய்தியாளரிடம் பேசினார்.*

*(சவுண்ட் பைட் – மிருதுளா 32 செகண்ட்ஸ்)*

**>>>>>><<<<<<**

*Macau ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Lakshya Sen அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-14, 18-21, 21-14 என்ற செட்கணக்கில் சீனாவின் Zhu Xuan Chan-ஐ வென்றார்.*

**>>>>>><<<<<<**

*ஆசிய பாரா Taekwondo சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆடவர் 41 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Saju தங்கப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் 47 கிலோ எடைப் பிரிவில் Lakshmi -ம், 65 கிலோ எடைப்பிரிவில் Lincyaவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

**>>>>>><<<<<<**

*ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் தொடக்க சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Suman Kumari வெற்றிபெற்றார்.*

*பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் அவர் சீன தைபே-யின் Meng Sin Cheng-யை வென்றார்.*

**>>>>>><<<<<<**